**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 489/2024**
**வழக்கு சாட்சி PW–1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜான்சன் | தாலுகா | : | தென்காசி |
| தந்தை பெயர் | : | முத்துச்சாமி | தொழில் | : | சிறப்பு உதவி ஆய்வாளர் |
| கிராமம் | : | கடையம் | வயது | : | 48 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Monday of 02.03.2026.

**(1ம் எதிரி காணொளி மூலம் ஆஜர்படுத்தப்பட்டார். 2ம் எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது சென்னை தாம்பரம் மாநகர காவல் ஆணையகத்திற்கு உட்பட்ட மேடவாக்கம் குற்றப்பிரிவு காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு ஆலங்குளம் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணியில் இருந்தபோது, கடந்த 29.05.2024ம் தேதி, இரவு ரோந்து பணியில் நானும், தலைமைக்காவலர் தங்கத்துரை என்பவரும் ஈடுபட்டிருந்தோம். பின்பு 30.05.2024ம் தேதி, அதிகாலை 12.05 மணிக்கு ஆலங்குளம் பேருந்து நிலையத்திலுள்ள தவசி ஹோட்டல் முன்பு ரோந்து செய்து கொண்டிருந்தபோது, அங்கு இருசக்கரவாகனத்தில் வந்த பின்னால் ஊர், பெயர், விலாசம் கேட்டு தெரிந்துகொண்ட சிவலார்குளம் பிள்ளையார்கோவிலைச் சேர்ந்த முத்தையா என்பவரது மகன் கல்யாண சுந்தரம், சிவலார்குளம் அம்மன்கோவில் தெருவைச் சேர்ந்த

சங்கரபாண்டியன் என்பவரது மகன் நிர்மல் என்பவரும் இருசக்கரவாகனத்திலிருந்து இறங்கி எங்களிடம் வந்து போலீஸ்கார தேவடியா மக்களா, என்று பொது இடத்தில் எங்களை பார்த்து அசிங்கமாக பேசி, எங்க தம்பிகளை கஞ்சா கேஸ் போட்டு, கஞ்சா விற்ற பணத்தையும், கைப்பற்றி ஜெயில்ல அடைத்து விட்டுட்டு, இங்க வந்து நிக்குறீங்களா? என சொல்லி எங்களை அரசு பணியை செய்யவிடாமல் தடுத்து, கல்யாண சுந்தரம் என்பவர் நிர்மல் என்பவரிடம் போலீஸ்காரங்களை வெட்டிக்கொல்லுடா, என்று சொல்லி நிர்மல் தனது சட்டையின் பின்புறம் மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து தங்கத்துரை என்பவரின் கழுத்தை நோக்கி தாயோலி இத்தோடு செத்து தொலை என்று சொல்லி வெட்டும்போது சுதாரித்து கொண்ட தங்கத்துரையின் தலையின் பின்புறம் இரத்தக்காயம் ஏற்பட்டது. அவர் திரும்பவில்லை என்றால் அவர் தலையானது வெட்டுப்பட்டு துண்டாகியிருக்கும்.

பின்பு நிர்மலிடமிருந்து கல்யாணசுந்தரம் அரிவாளை பெற்றுக்கொண்டு என்னை பார்த்து தாயோலி இத்தோடு செத்து தொலை என்று சொல்லி வெட்ட வரவும், நான் தப்பித்து கிழக்கு பார்த்து ஓடவும், தங்கத்துரை அங்கிருந்து தவசி ஹோட்டல் வழியாக வெளியே சென்று ஓடி விட்டார். பின்பு அங்கு நிறுத்தப்பட்டிருந்த எனது இருசக்கரவாகனமான TN-72-BR -9563 ஹீரோ கிளாமர் வண்டியை கல்யாண சுந்தரம் என்பவர் அரிவாளால் முன்பக்க மாஸ்க் மற்றும் இடது பக்க கைப்பிடியை வெட்டி சேதப்படுத்தினார். இதன் மதிப்பு ரூ.1000/- ஆகும். இதை பார்த்த அருகிலுள்ள மக்கள் மற்றும் தவசி ஹோட்டலில் வேலை பார்க்கும் நபர்கள் அருகே வந்து பிடிக்க வரவும், கிட்டே வந்தால் வெட்டிக்கொன்று விடுவேன் என்று எதிரிகள் மிரட்டினார்கள். மக்கள் கலைந்து சென்றார்கள்.

பின்பு, சம்பவம் கேள்விபட்டு ஆலங்குளம் காவல்துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இரவு பணியில் இருந்த இராஜாதானுஜெயன் என்பவர் சம்பவயிடத்திற்கு வந்தவுடன் நானும், அவரும் தங்கத்துரை ஏட்டையாவை ஆலங்குளம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று வெளிநோயாளியாக சிகிச்சை பெற்று, ஆலங்குளம் காவல்நிலையம் வந்து தங்கத்துரை புகார் மனு கொடுத்தார். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.03.03 15:22:06 +0530